பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 02 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. இந்தியாவுக்கும் - கத்தாருக்கும் இடையே இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான இரண்டு முக்கிய ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தானது.
2. நீர்வள மேம்பாட்டில் நாடு தன்னிறைவு பெரும் வகையில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக மத்திய ஜல்சக்தி துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.
3. பெண்களை பாதிக்கும் புற்று நோய்களுக்கான தடுப்பு மருந்து இன்னும் ஆறு மாதங்களில் பயன்பாட்டுக்கு வரும் என்று மத்திய இணை அமைச்சர் திரு பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் தனியார் பள்ளிகளைப் போல அரசு பள்ளி மாணவர்களும் மூன்றாவது மொழியை கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை மாநில அரசு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.
5. ரஷ்யா - உக்ரைன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையேயான பேச்சுவார்த்தை சவுதி அரேபியாவில் இன்று நடைபெற்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

இந்தியாவுக்கும் - கத்தாருக்கும் இடையே இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான இரண்டு முக்கிய ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தானது.

அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள கத்தார் நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் உள்ள ஷேக் தமீம் பின் ஹமத்துக்கும், பிரதமர் திரு நரேந்திரமோடிக்கும் இடையே இரு நாட்டு தூதுக்குழுவினருடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இதன் பின்னர் வர்த்தகம், எரிசக்தி, முதலீடு, புதுமை கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பம், உணவு பாதுகாப்பு, கலாச்சாரம் மற்றும் இரு நாட்டு மக்களுக்கு இடையேயான தொடர்பை வலுப்படுத்தும் வகையில் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இரட்டை வரி விதிப்பை தவிர்ப்பதற்கும், வரி ஏய்ப்பை தடுப்பதற்கும் மற்றொரு ஒப்பந்தமும் கையெழுத்தாகின.

இரு நாட்டு தலைவர்கள் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இரு தலைவர்களும் மண்டல மற்றும் உலக அளவிலான முக்கிய பிரச்சினைகள் குறித்தும் பேச்சு நடத்தினர்.

முன்னதாக இன்று காலை குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கத்தார் நாட்டு தலைவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் முன்னிலையில் இந்திய வர்த்தக கூட்டமைப்புக்கும், கத்தாரின் தொழில் முதலீட்டாளர் சங்கத்துக்கும் இடையே வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு பியூஷ் கோயல், இந்தியா — கத்தார் இடையேயான கூட்டு முயற்சிகள் எதிர்காலத்தில் தொழில்நுட்பம், பொருளாதார வளர்ச்சி, எரிசக்தி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நீர் பாதுகாப்பில் நாடு தன்னிறைவு பெரும் வகையில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக மத்திய ஜல்சக்தி துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் உதய்ப்பூரில் மாநில நீர்வளத்துறை அமைச்சர்களின் இரண்டுநாள் மாநாட்டை இன்று தொடங்கி வைத்து பேசிய அமைச்சர், மத்திய ஜல்சக்தித்துறையின் மூலம் 15 கோடி வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப் பட்டிருப்பதாகக் கூறினார்.

நீர் தூய்மை சோதனை தொடர்பாக 25 லட்சம் மகளிருக்கு பயிற்சி வழங்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மழைநீர் சேகரிப்பை ஊக்குவிக்கும் வகையிலான முயற்சிகள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தேசிய புவிசார் நில அளவைக்கான நக்சா திட்டத்தை மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் இன்று மத்திய பிரதேச மாநிலம் ராய்செனில் தொடங்கி வைத்தார்.

26 மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 152 நகரங்களில் உள்ள நிலங்களை ட்ரோன் மூலம் நவீன முறையில் கணக்கெடுக்கும் பணி இந்த திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு சிவராஜ் சிங் சௌகான், நில அளவை குறித்த துல்லியமான தகவல்களை நகர்புற உள்ளாட்சி அமைப்புகளும், நில உரிமையாளர்களும் தெரிந்து கொள்வதற்கு இந்த முன்னோடி திட்டம் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

நிலப் பதிவேடுகளில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களை உடனடியாக சரி செய்வதற்கும் இத்திட்டம் பேறுதவியாக இருக்கும் என்று அவர் கூறினார்.

பொதுமக்கள் ஒரு குறிப்பிட்ட நிலம் குறித்த தகவல்களை எவ்வித சிரமமுமின்றி தெரிந்து கொள்வதற்கும், நில பதிவேடுகளை பார்வையிடுவதற்கும் இந்த நவீன தொழில்நுட்பம் உதவுவதாக அவர் குறிப்பிட்டார்.

இணையதளம் வாயிலாகவே நில பதிவுகள் குறித்த தகவல்களை அறிந்து கொள்ள முடியும் என்பதால், நில தாவாக்கள் பெருமளவு தவிர்க்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த முன்னோடி திட்டம் மக்களின் நம்பிக்கையை பெரும் என்றும் திரு சிவராஜ் சிங் சௌகான் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

புதுச்சேரியில் தேசிய புவிசார் நில அளவைக்கான நக்சா திட்டத்தை முதலமைச்சர் திரு ரங்கசாமி, புதுவை யூனியன் பிரதேசத்தில் உள்ள முருகப்பாக்கம் கிராமத்தில் தொடங்கி வைத்தார்.

இந்த நில அளவைப் பணி முடிவுற்றவுடன் ட்ரோன் மூலம் எடுக்கப்பட்ட நில அளவை தகவல்களுடன் நில வரி தொடர்பான தகவல்களும் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலத்தின் உரிமையாளர் குறித்த தகவல்களை சரியாக அறிந்து கொள்வதற்கு இந்த திட்டம் பேறுதவியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டு இன்றுடன் ஒன்பது ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

கடந்த 2016-ஆம் ஆண்டு பிரதமர் திரு நரேந்திரமோடியால் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழ் இயற்கை பேரிடர் காலங்கள் மற்றும் உற்பத்தி பாதிப்பை எதிர்கொள்ள விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டு வருகிறது.

பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மற்றும் மறுசீரமைக்கப்பட்ட பருவநிலை அடிப்படையிலான பயிர்க்காப்பீட்டுத் திட்டங்கள் விவசாயிகளுக்கு மிகுந்த பயனளித்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

பெண்களை பாதிக்கும் புற்று நோய்களுக்கான தடுப்பு மருந்து இன்னும் ஆறு மாதங்களில் பயன்பாட்டுக்கு வரும் என்று மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் திரு பிரதாப்ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் சத்ரபதி சம்பாஜி நகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தடுப்பூசிக்கான ஆய்வுப் பணிகள் நிறைவு பெற்றிருப்பதாகவும், பரிசோதனைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

நாட்டில் புற்று நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகக் கூறிய அமைச்சர், 30 வயதுக்கு மேற்பட்ட மகளிருக்கான புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் நாடு முழுவதும் விரைவில் தீவிரப்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

தில்லி சட்டப்பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் புதுதில்லியில் நாளை நடைபெறுகிறது.

அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் 70 சட்டப்பேவைத் தொகுதிகளில் கொண்ட தில்லியில் 48 தொகுதிகளில் பிஜேபி வெற்றிபெற்று ஆட்சி அமைக்கவுள்ளது.

நாளை நடைபெறும் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், அக்கட்சியின் சட்டமன்ற கட்சித்தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு புதிய முதலமைச்சராக பதவியேற்கவுள்ளார்.

தலைநகர் தில்லியில் உள்ள ராம்லீலா மைதானத்தில் நாளை மறுநாள் புதிய முதலமைச்சரின் பதவியேற்பு விழா நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் உள்ள அரசு பள்ளி மாணவர்களும் மூன்றாவது மொழியை கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை மாநில அரசு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், நாட்டில் கேந்திரிய வித்யாலயா, நவோதயா பள்ளிகள் உட்பட அனைத்து கல்வி நிலையங்களிலும் தேசிய கல்விக் கொள்கையின் மும்மொழித் திட்டம் செயல்படுத்தப்படுவதை சுட்டிக்காட்டினார்.

தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் மூன்றாவதாக ஒரு மொழியை கற்கும் நிலையில், அரசு பள்ளி மாணவர்களுக்கு மட்டும் அந்த வாய்ப்பு மறுக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் திரு அண்ணாமலை கூறினார்.

**[]<<<>>>[]**

பஞ்சாப், உத்தராகண்ட், சத்திஷ்கர் மாநிலங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஐந்தாவது நிதிக்குழுவின் மானியமாக 562 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

இது தொடர்பாக பஞ்சாயத்துராஜ் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஊரகப் பகுதிகளில் உள்ள பஞ்சாயத்துராஜ் அமைப்புகளுக்கு போதிய நிதி கிடைக்கப்பெற்று வளர்ச்சித் திட்டங்கள் துரிதமாக மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்கும் கிராமப் பஞ்சாத்துக்களை வலுப்படுத்துவதற்கும் இந்த நிதி உதவிகரமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகையில் பஞ்சாப் மாநிலத்துக்கு 225 கோடி ரூபாயும், சத்திஷ்கருக்கு 244 கோடி ரூபாயும், உத்தராகண்டுக்கு 93 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையேயான பேச்சுவார்த்தை சவுதி அரேபியாவில் இன்று நடைபெற்றது.

ரியாக் நகரில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லவ்ரோ, அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ மற்றும் இரு நாட்டு பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வந்து அந்நாட்டில் அமைதியை நிலைநாட்டும் நோக்கில் இந்த பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படுவதாக ரஷ்யாவும், அமெரிக்காவும் தெரிவித்துள்ளன.

இதற்கிடையே தங்களது பங்களிப்பு இல்லாமல் மேற்கொள்ளப்படும் எந்த பேச்சுவார்த்தையையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று உக்ரைன் அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

பொலிவியா நாட்டில் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் 30 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் **yocalla** எனும் பகுதியில் 800 மீட்டர் ஆழம் கொண்ட பள்ளத்தாக்கில் பேருந்து நிலை தடுமாறி விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆடவர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா – ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

புவனேஸ்வரில் இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

இன்று மாலை நடைபெற்ற மகளிர் பிரிவு ஆட்டத்தில் ஸ்பெயின் நான்கு - மூன்று என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

**[]<<<>>>[]**

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று குஜராத் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.